# கிருபையுள்ள வார்த்தை


GRACIOUS WORD Luke 4:22

Vol - 14 September செப்டம்பர் 2013

ஆண்டு சந்தா ரூ. 100/- தனிப் பிரதி ரூ. 8/- வெளிநாட்டு சந்தா ரூ. 600/-


## நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்

மத்தேயு 5:6




கௌரவ ஆசிரியர் Betty Choate ஆசிரியர் PCPR


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| இருதயப் பசி | 3 |
| கிறிஸ்துவின் சபை... | 7 |
| யோபும் நண்பர்களும்... | 10 |
| எல்லாரும் தீர்க்கதரிசிகளா? | 13 |
| நீங்கள் இரட்சிக்கப்பட ... | 23 |
| இயேசுவின் இரத்தம் | 27 |


*In memory of*

**J.C. CHOATE**


ஆசிரியர் குழு

Guest Editors : **BETTY CHOATE**
**JERRY & PAULA BATES**

**Editor : PCPR**

**V. கிங்ஸ்லிராஜா.** M.S. (I.T.& M.)., M.Th.,
**Dr. V.S. இம்மானுவேல்.** M.Sc., D.D.,
**C. கியாமிலஸ் கார்த்திக்.** B.Sc.,
**R. ஆண்டனி ராஜா.** D.Th.,
சட்ட ஆலோசகர் : **M. முரளி** B.A.,B.L.

**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi,
Madurai 625 016. India


**கிருபையுள்ள வார்த்தை**

**இருதயப் பசியைத்
தூண்டும் இறைவனின்
வார்த்தை**

# கிருபையுள்ள வார்த்தை
# TV நிகழ்ச்சிகள்




**தமிழன் T.V. யில்**

ஞாயிறு காலை - 6.45
வெள்ளி காலை - 6.00

**Holy Cross T.V.**
(புதுச்சேரி)

ஞாயிறு காலை - 6.30

**King of Glory T.V.**
(திருநெல்வேலி)

ஞாயிறு காலை - 6.00

செய்தியாளர் :
போதகர். **பிலேமோன்ராஜா.** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)



அரசரடி கிறிஸ்துவின் சபையின்
வாலிபர் ஐக்கியம்
Arasaradi church of Christ Youth fellowship

# இருதயப் பசி



**P.C. பிலேமோன் ராஜா**
ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை

கிறிஸ்துவின் மேல் வாஞ்சையும் தாகமும் கொண்ட கிருபையுள்ள வார்த்தை வாசகர்களே! உங்கள் யாவருக்கும் மீட்பர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக்களும் ஜெபங்களும்.

அன்பானவர்களே! ஆண்டவர் இயேசு கிறிஸ்து மலைப்பிரசங்கத்தில் மத் 5:6 ''நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்". என்று சொன்னார். இந்த வசனத்தை மையமாக கொண்டு நாம் இந்த மாதம் ஆராய்ச்சி செய்வோம்.

### I. பசி எப்படிப்பட்டது?

பிரியமானவர்களே! பசி என்பது பயங்கர கொடுமையானது. பசி உணர்வினை சில நேரங்கள், நாட்கள் தாங்கி கொள்பவர்கள் நம்மிடையும், வேதாகமத்திலும் உண்டு. ஆனால், பசியின் உச்சம் என்பது மரணத்தை வருவிக்கும் அபாயகரமானது. எபி 12:16 மற்றும் ஆதி 25:27-34 ஆகிய வசனங்களில், ஏசா ஒரு வேளை சாப்பாட்டிற்காக, தன் மூத்த மகனுக்குரிய ஸ்தானத்தை, ஆசீர்வாதத்தை (சொத்தை) தூக்கி எறிந்தான்.

வனாந்திரத்தில் இஸ்ரவேல் மக்கள், எகிப்திலே உண்ட மீன்களையும், வெள்ளரிக்காய், பூண்டு, கீரை, வெங்காயங்களை நினைத்து நினைத்து அழுது, முறுமுறுத்து கர்த்தரை கோபப்படுத்தினார்கள் (எண் 11:5,10).

நீதி 30:8,9 வசனங்களில் ஆகூர் ''தான் வறுமையடைந்து, திருடி தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதபடி என் படியை அளந்து என்னை போஷியும்'' என்று ஜெபிக்கிறார். பசியாக இருப்பவர் உணவிற்காக திருடுதல் என்பது வறுமையின் சோதனையாக இருக்கும்.

மத் 4:2ல் ஆண்டவர் இயேசு, இரவும் பகலும் 40 நாள் உபவாசமிருந்த பின்பு, அவருக்கு பசி உண்டானது. சாத்தான் கல்லை அப்பமாக்கி சாப்பிடும்படி சோதித்தான். யோவான் 19:28ல் உடலிலிருந்த வலிமை எல்லாம் இறங்கி மிகவும் சோர்ந்து, மரணத்தின் கடைசி நிமிடங்களில் "தாகமாயிருக்கிறேன்" என்றார். போர்ச்சேவகர்களோ மிகவும் கசப்பான நீரை அவருக்கு குடிக்க கொடுத்து அவரை சோதித்தனர்.

பசி எப்படிப்பட்டது பார்த்தீர்களா? ஏசா தனது சொத்தை விற்றான். இஸ்ரவேலர் நன்றிகெட்டு முறுமுறுத்து கர்த்தரை கோபப்படுத்தினார்கள். மனிதன் திருடி தேவனை அவமானப்படுத்துகிறான். இயேசுவும் பசியினாலும், தாகத்தினாலும் தளர்ந்த போது சோதிக்கப்பட்டார். ஏனெனில் பசியும், தாகமும் அவ்வளவு கொடுமையானது.

**II பசியும், தாகமும் பாக்கியம்**

மேலே சொல்லப்பட்ட குறிப்பில் உள்ள சரீரத்துக்குரிய பசி, தாகத்தை பற்றி ஆண்டவர் பேசவில்லை. மாறாக ஆவிக்குரிய (ஆத்துமாவிற்கான) பசி, தாகத்தைப் பற்றி பேசுகிறார்.

மத் 5:6 ''நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்". நீதி என்பது கிரேக்கத்தில் "dikaiosune" "சரி"4 என்றும், மற்றும் "சரியானவராக இருத்தல்" என்றும் பொருள்படும். இந்த பதம் தேவனுடைய தன்மையை குறிப்பதற்காக பயன்படுத்துவது.



நம்மை உண்டாக்கிய தேவனுடன் சரியாக நிலைநிற்க, நாம் ஆழமான ஏக்கம் கொண்டிருக்க வேண்டும்.

ஏனெனில் அவர் ஒருவரே எல்லாவற்றிலும் சரியானவராக இருக்கிறார்.

இதை மக்களுக்கு பயன்படுத்தும் போது இரண்டு அர்த்தப்படும்.

அ) சரியாக வாழுதல் (1யோ 2:29, 3:7,10); நம்மில் எவரும் மிகச்சரியாக வாழ இயலாது. இது சார்பளவிலான நீதியாக உள்ளது. ஆ) சரியாக நிலைநிற்குதல், அதாவது கர்த்தருடன் சரியாக நிலை நிற்குதல் என்பதாகும்.

நாம் நீதிமான்களாக இருப்பதில்லை (ரோமர் 3:10). ஆனால், இயேசுவில் விசுவாசம் கொண்டு தேவனுடைய சித்தத்தை செய்யும் போது, தேவன் நம்மை நீதிமானாக எண்ணுகிறார் (ரோமர் 4:3-5). இது நமது தனிபட்ட தகுதியின் அடிப்படையில் அல்ல, மாறாக இரக்கம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே தேவனுடன் சரியாக நிலை நிற்குதலைக் கொண்டிருக்க முடியும்.

நீதி என்பது சரியாக இருத்தல், சரியாக வாழுதல் மற்றும் சரியாக நிலைநிற்குதல் என்று அர்த்தப்படும். நாம் இதில் சரியாக நிலைநிற்குதல் என்பதனை பற்றி ஆழமாக தியானிப்போம். ஏனெனில் சரியாக இருக்க, சரியாக வாழ பிரயாசப்படும் கிறிஸ்தவர், தேவனுடன் நல்ல நிலைநிற்குதலில் இருப்பார்.

நம்மை உண்டாக்கிய தேவனுடன் சரியாக நிலைநிற்க, நாம் ஆழமான

ஏக்கம் கொண்டிருக்க வேண்டும். நம்மீது அன்பு கூர்ந்து, நம்மை பராமரிக்கிற அவருடன் வலிவார்ந்த உறவை கொண்டிருக்க விருப்பம், என்ற பசிதாகம் உள்ளவர்களாக இருத்தல் என்பது அவசியமாகும்.

தாவீது, 'மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவது போல தேவனே என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது. என் ஆத்துமா தேவன் மேல், ஜீவனுள்ள தேவன் மேலேயே தாகமாயிருக்கிறது' என்று எழுதினார்(சங் 42:1,2, 63: 1, 143:6). நாம் தேவனுக்காகவும் இயேசுவுக்காகவும் ஏங்கினால், அவர்களுடன் நிலை நிற்கவும் ஏங்க மாட்டோமா என்ன!

இயேசு முழுமையான நீதியின் மேல், முற்றான நீதியின் மேல், நிறைவான நீதியின் மேல் பசிதாகம் உள்ளவர்கள் பாக்கியவான்கள் என்றார். தேவன் தமது வசனத்தை படிப்பதன் மூலம் அவரில் சரியாக நிலைநிற்க முடியும், என்றார். வசனத்திலிருந்து நாம் சரியாக (நீதியின்படி) வாழக் கற்றுக் கொள்கிறோம். (சங் 119:172).

நாம் நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்களாக இருந்தால், அது வேத வசனங்களை பற்றிய ஆழமான அறிவு மற்றும் புரிந்து கொள்ளுதல் மீதான பசிதாகத்தையும் உள்ளடக்கும். தேவனுடைய வசனம் நமது ஆத்துமாவிற்கு உணவு அளிக்கிறது. (மத் 4:4; 1கொரி 3:2; 1 பேது 2:3; எபி 5:12-14). ஆத்துமாவை போஷிக்க வசனத்தை வாசித்தலும் படித்தலும் மட்டும் போதாது, மேலும் அது கூறுவதுபடி செய்ய வேண்டும் (யோவான் 4:34)

## III. பசி மற்றும் தாகம்

பசியாயிருத்தல் மற்றும் தாகமாயிருத்தல் ஆகியவற்றைப் பற்றி இயேசு பேசியபோது, அவரின் வார்த்தைகள் நம்மில் சிலருக்கு அர்த்தப்டுவதைக் காட்டிலும் அதிகமாக முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களுக்கு அர்த்தப்பட்டன. ஏனெனில் அவர்கள் புண்பட்டு அல்லது வியாதிப்பட்டு உழைக்க முடியாது போனபோது, அவர்களுக்கு ஊதியமே கிடைக்கவில்லை. அவர்கள் இரவு வேளைகளில் பசியினால் தங்கள் குழந்தைகள் கதறி அழுவதை கவனிக்க வேண்டியதாயிற்று.

பசி என்பது பசித்திருக்க, பசியுடன் இருத்தல் தேவையினால் துன்புறுதல் தேவையுடன் இருத்தல் என்று அர்த்தப்படுகிற Peinao என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்துள்ளது. தாகம் என்பது தாகத்தினால் துன்புறுதல் தாகத்திலிருந்து துன்புறுதல் என்று அர்த்தப்படுகிற Dipsao என்ற வார்த்தையிலிருந்து வந்தது.

நீங்கள் நீதிக்காக உண்மையிலேயே பசிதாகமுள்ளவர்களாக இருக்கிறீர்களா? இல்லையா? என்பதை தீர்மானிக்க சில தேர்வுகள்.

1. நீங்கள் உலகப்பிரகாரமான விஷயங்கள் அல்லது ஆவிக்குரிய விஷயங்கள், இவற்றில் எதைப்பற்றி அதிக அக்கறையாக இருக்கிறீர்கள்?

2. சொத்துக்களை தேடிபெறுதலை காட்டிலும் தேவனுடன் நெருங்கி இருப்பது உங்களுக்கு அதிக முக்கியமானதாக இருக்கிறதா?

3. மக்களிடத்தில் பிரபல்யமாயிருத்தலைக் காட்டிலும், தேவனுடன் சரியாக நிலைநிற்குதல் உங்களுக்கு மிகவும் அக்கரைக்குரிய விஷயமாக உள்ளதா?

4. வெற்றி நிறைந்தவர்களாக இருத்தலைக் காட்டிலும், தேவபக்தியுள்ள வாழ்வை வாழுதல் குறித்து நீங்கள் அதிக தீவிரமாக இருக்கிறீர்களா? நீங்கள் எதற்கு முன்னுரிமை கொடுக்கிறீர்கள் ஆவிக்குரிய வகையில் உணவு பெறக்கூடிய ஒவ்வொரு வாய்ப்பையும், நீங்கள் பலன் பெறும் வகையில் பயன்படுத்திக் கொள்கிறீர்களா என்பதனை யோசித்துப் பாருங்கள்.



நாம் தேவனுக்காகவும் இயேசுவுக்காகவும் ஏங்கினால், அவர்களுடன் நிலை நிற்கவும் ஏங்க மாட்டோமா என்ன!

தேவனுடைய வசனத்திற்கான பசி குறைபடும் இடத்தில் பேசுபவரிடத்தில் அல்ல கேட்பவரிடத்திலேயே குறைவு உள்ளது. ஆகையால்,

1. ஆவிக்குரிய போஷாக்கின் அவசியத்தை உணர்ந்து அறிவியுங்கள் (லூக்கா 6:21)

2. ஆவிக்குரிய போஷாக்கை மதித்தலை மேம்படுத்திக் கொள்ளுங்கள்

3. ஆவிக்குரிய பயிற்சியைக் கொண்டு, உங்கள் ஆவிக்குரிய பசியை மேம்படுத்துங்கள் (1 தீமோ 4:7; ரோமர் 12:6)

4. முறையாக உண்பதால் உங்கள் ஆவிக்குரிய பசியை மேம்படுத்திக் கொள்ளுங்கள் (அப் 17:11)

5. பசியை அழிக்கும் விஷயங்களை பற்றி எச்சரிக்கையாயிருங்கள் (ஏசா 55:2)

இறுதியாக,

பிரியமானவர்களே! நம் பசி எதன்மீது இருக்கிறது. உலகத்தின் மீதா? உன்னதமான தேவனின் மீதா? நாம் எதை செய்கிறோமோ அதின் மேல் பசியாயிருக்கிறோம் என்று அர்த்தம். நாம் தேவனின் மீதும் அவருடைய வார்த்தையின் (நீதியின்) மீதும் பசிக்கொண்டு பாக்கியவான்களாய் (மகிழ்ச்சிகுரியவர்களாய்) வாழ்வோம்!

# 12 கிறிஸ்துவின் சபை என்றால் என்ன?



J.C. Choate

தங்களை கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினர்கள் என்று கூறும், உங்கள் வீட்டருகில் உள்ள ஒரு கூட்டத்தாரைப் பற்றி நீங்கள் ஆச்சர்யப்படுவதுண்டு. உங்களை நீங்களே கேள்வி கேட்டிருப்பீர்கள்: இந்த மக்கள் யார்? இவர்கள் எதை நம்புகிறார்கள் மற்றும் பயிற்சி செய்கிறார்கள்? கிறிஸ்துவின் சபை என்றால் என்ன? நல்லது, இதைப் பற்றிதான் நாங்கள் இப்பொழுது உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம்.

**முதலாவது,** கிறிஸ்துவின் சபையானது நாமகர்ணமல்லாத, பிரிவினை இல்லாத ஒரு கூட்டம் ஆகும். இவர்கள் ப்ராட்டஸ்டன்டோ, யூதர்களோ, கத்தோலிக்கரோ அல்ல; இவர்களுடைய முயற்சியானது, வேதாகமம் எங்கு பேசுகிறதோ அங்கு பேசுவதும்; மற்றும் வேதாகமம் எங்கு அமைதியாக உள்ளதோ அங்கு அமைதி காப்பதுமாக உள்ளது. இவர்கள் தங்களை எந்த நிலைக்கும், வடிவத்திற்கும் ஆவிக்குரிய காரியங்களில் மாற்றிக் கொள்வதில்லை (வெளி 22:18,19; கலா 1:7-9).

இரண்டாவது, கிறிஸ்து கட்டுவேன் என்று வாக்குக் கொடுத்த சபை, கிறிஸ்துவின் சபை தான். இந்த வார்த்தைகளை கிறிஸ்து பேதுருவிடம் பேசினார்: “மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை” (மத் 16:18).

**மூன்றாவது,** கிறிஸ்துவின் சபையானது பெந்தெகோஸ்தே நாளில் கி.பி.33ம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டதாகும். பதிவுகள் (Record) கூறுவது என்னவெனில், முதன் முதலில் பேதுரு சுவிசேஷம் பிரசங்கம் செய்தபோது, ஏறக்குறைய 3000 பேர் ஆண்டவருக்கு (ஞானஸ்நானம் மூலம்) கீழ்படிந்து, சபையிலே சேர்க்கப்பட்டனர் (அப் 2). அந்த சபையே, இன்றுவரை கிறிஸ்துவின் சபையாக நிலைபெற்றுள்ளது.

**நான்காவது,** கிறிஸ்துவின் சபையானது, கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகும். அப்போஸ்தலனாகிய பவுல், கொரிந்துவில் இருந்த சபை அங்கத்தினர்களிடம் பேசுகையில்: “நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்'' என்றார் (1கொரி 12:27).

**ஐந்தாவது**, கிறிஸ்துவின் சபையானது வசனத்தில் சொல்லப்பட்ட ஒரே ஒரு சரீரமாகும். ஒரே ஒரு சரீரத்தைப் பற்றி பைபிள் கூறும் சத்தியம் இதுவே. "ஒரே ஒரு சரீரம் மட்டும் உண்டு" (எபே 4:4). அந்த சரீரமானது சபையாகும் (எபே 1:22,23). ஆகையால், ஒரே ஒரு சபை மட்டுமே உண்டு.

**ஆறாவது,** கிறிஸ்துவின் சபையானது கிறிஸ்துவையே தன்னுடைய தலையாக (தலைவர்) ஏற்றுக்கொண்டுள்ளது. ''அவரே சபையாகிய சரீரத்திற்கு தலையானவர்" (கொலே 1:18). கிறிஸ்துவே (மட்டுமே) மேலானவர்.

**ஏழாவது**, கிறிஸ்துவின் சபையானது கிறிஸ்துவை தன்னுடைய இரட்சகராக அங்கீகரித்துள்ளது. ''கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்" (எபே 5:23).



கிறிஸ்து அவருடைய இரத்தத்தினாலே தனது ஒரே சபையை வாங்கினார் என்பதிலிருந்து, "சபை" எவ்வளவு மதிப்புள்ளது என்பதை நாம் அறிய முடிகிறது.

**எட்டாவது,** கிறிஸ்துவின் சபையானது கிறிஸ்துவின் இரத்தத்தினால் வாங்கப்பட்ட ஒன்றாகும். கிறிஸ்துவே தன்னுடைய சொந்த இரத்தத்தினாலே அதை விலைக்கு வாங்கினார் (அப் 20:28). ஆதலால் சபையானது மிகவும் முக்கியமானதாகும்.

**ஒன்பதாவது,** கிறிஸ்துவின் சபையானது, ஆண்டவருடைய சித்தத்திற்கு கீழ்படிந்து அவராலேயே சபையிலே சேர்க்கப்பட்ட கிறிஸ்தவர்களை உள்ளடக்கியதாகும் (அப் 2:47; 1 கொரி 12:13). ஒருவர் தானாக ஆண்டவருடைய சபையில் சேர முடியாது.

**பத்தாவது,** கிறிஸ்துவின் சபையானது கிறிஸ்துவினுடைய நாமத்தை உயர்த்துகிறது. சபை தானாகவே கிறிஸ்துவின் பெயரையே தரித்துள்ளது. அது மட்டுமல்ல, அவ்வாறே சபையின் ஒவ்வொரு அங்கத்தினரும் அவருடைய பெயரை தரித்துள்ளனர் (ரோ16:16; 1 பேதுரு 4:16). இங்கே, மனிதனால் உண்டாக்கப்பட்ட பெயர்களும், தலைப்புகளும் நிராகரிக்கப்படுகின்றன.

**பதினொன்றாவது,** கிறிஸ்துவின் சபையானது ஆண்டவரின் திட்டமான

வசனத்தின்படியான ஆளுகை அமைப்பை அங்கீகரிக்கின்றது (1 தீமோ 3). அதாவது மூப்பர்கள் போன்றோர்.

**பன்னிரெண்டாவது,** கிறிஸ்துவின் சபையானது இவ்வுலகில் உள்ள மிக சிறந்த வேளையில் ஈடுபட்டுள்ளது, அதாவது இரட்சிக்கப்படாதவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிப்பதாகும் (மத் 28:18-20; எபே 2:10).

**பதிமூன்றாவது,** கிறிஸ்துவின் சபையானது, தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்கின்றனர். இதை அவர்கள் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் ஜெபிப்பது, பைபிளை படிப்பது, பாடுவது, காணிக்கை கொடுப்பது மற்றும் கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுவது ஆகியவற்றின் மூலம் தொழுது கொள்கின்றனர் (யோ 4:24; அப் 20:7).

**பதினான்காவது,** கிறிஸ்துவின் சபையானது கிறிஸ்தவத்தை பயிற்சி செய்கிறது. அதில் உள்ள ஒவ்வொரு அங்கத்தினரும் மரணம் வந்திடினும் விசுவாசமாக (உண்மையாக) இருக்க வேண்டும் (வெளி 2:10; 22:14).

அன்பு நண்பரே, இந்த, மேலே உள்ள வாக்கியங்களின் வெளிச்சத்தில் கிறிஸ்துவின் சபையைப் பற்றி சிந்தியுங்கள்; எல்லாவற்றிற்கும் மேலாக, பைபிள் என்ன போதிக்கிறது? என்பதின் அடிப்படையில் சிந்தியுங்கள். கிறிஸ்துவின் சபை கூடுகையில் கலந்து கொண்டீர்களானால், நீங்கள் ஒரு மதிப்புள்ளவராக உணருவீர்கள்; மேலும் அதே சமயம், வசனத்தின்படி மட்டுமே போதிக்கப்படுவீர்கள்.

பிரியமானவரே, நீங்கள் கிறிஸ்துவையும் அவருடைய வார்த்தைகளையும் விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை அறிக்கை செய்து, உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும்படியாக ஞானஸ்நானம் பெறும்போது கிறிஸ்துவின் சபையின் அங்கமாக முடியும் (மாற்கு 16:15,16). ஒருவர் சத்தியத்திற்கு மட்டும் கீழ்படிந்தால், அது அவரை வேறு எதுவாகவும் அல்ல, புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவராக மட்டுமே மாற்றும்.

**கண்டுபிடிங்க பார்ப்போம்!**

ஒரு பெண்மணி
தன்னுடைய வயது 35
என்று சொன்னார்.
அதில் அவர் சனி, ஞாயிறு
கிழமைகளை சேர்க்கவில்லை;
அப்படியானால், அவருடைய
உண்மையான வயது என்ன?

# 7 யோபும், அவன் நண்பர்களும்



- சகோ. P.R. சாமி (பெங்களூரு)

யோபு எப்படிப் சாத்தானால் வாதிக்கப்பட்டான் என்று கடந்த பாடத்தில் படித்தோம். இப்பொழுது அதன் தொடர்ச்சியாக, எவ்வாறு நண்பர்களால் துன்பப்பட்டான் என்று பார்ப்போம்.

யோபுவின் மூன்று நண்பர்கள் அவனைத் தேற்ற வந்தனர். பின்பு அவர்களே அவனை பழி சுமத்துகிறவர்களாக மாறினர். எரிகிற நெருப்பில் எண்ணெய் விடுவதைப் போன்று ஏற்கனவே பாவம் செய்திருப்பாய் அதன் பிரதிபலனாகத்தான் கஷ்டப்படுகிறாய் என்றனர். ஏன் இந்த கஷ்டங்கள் என்று யோபுவுக்கு தெரியாது. இந்த மூன்று நண்பர்களுக்கும் விளங்கவில்லை. இந்நிலையில்தான் யோபுவின் மீது இந்தப் பழியை சுமத்தத் தொடங்கினர். யோபுவுக்கும் அவன் மூன்று நண்பர்களுக்குமிடையே நடந்த சம்பாஷணைகள் தான் இந்த சரிதையின் பெரும்பகுதி.

''உம்முடைய அக்கிரமத்திற்கேற்றபடி தேவன் உம்மைத் தண்டிக்கவில்லையென்று அறிந்துகொள்ளும்" என்றனர் (யோபு 11:6). அவர்கள் அப்படிக்கூறி விட்டதினால் அப்படியே ஆகிவிடுமோ? யோபு அந்த குற்றச்சாட்டுகளுக்கு பொறுப்பாளி அல்ல. அது வீண்பழி என்று நாம் அறிவோம். ஏனெனில் யோபு பாவத்தைப் பற்றியும் அதன் பிரதிபலனைப்பற்றியும் நன்றாக அறிவான். "நான் பாவம் செய்தால் அதை நீர் என்னிடத்தில் விசாரித்து என் அக்கிரமத்தை என்மேல் சுமத்தாமல் விடீர். நான் துன்மார்க்கனாயிருந்தால் எனக்கு ஐயோ!'' என்று அவனே கூறுகிறான் (10:14,15).அப்படியும் தவறு செய்திருந்தால், அதற்கு பரிகாரமாக எதைச் செய்ய வேண்டுமோ அதைச்செய்து மீண்டும் தேவனோடு உறவை புதுப்பித்துக்கொள்ளும் உணர்வுடையவனாக இருந்தான். "நான் மாயையில் நடந்தேனோ, என் கால் கபடு செய்யத் தீவிரித்ததோ என்று சுமுத்திரையான தராசிலே தேவன் என்னை நிறுத்தி என் அக்கிரமத்தை அறிவாராக" (31:5,6), என்கிறான்.

தேவனே யோபுவைக்குறித்து சாட்சி கூறி இருக்கிறார் என்றால் யோபு எப்படிப்பட்ட உத்தமன் என்று பாருங்கள் (யோபு 1:7,8). அது மாத்திரமல்ல, முடிவில் யோபுவின் நண்பர்கள் போட்ட கணக்கு தவறு என்பதை தேவன் நிரூபித்து, இவர்கள் இந்த அபாண்ட பழியை சுமத்தியதற்காக அவர்களை கடிந்துகொண்டார் (42:7,8). அப்படி ஒருவர் மீது அபாண்டமாக பழி சுமத்துவது பாவமான செயல் (நீதி 17:15). இயேசு கிறிஸ்துவும் பழி சுமத்தப்பட்டார்.

“தேவ துஷணம் பேசுகிறார்” என்றார்கள். முடிவில் ஒரு பாவமுமறியாத அவரை கல்வாரி சிலுவையிலறைந்து கொன்றார்கள். கிறிஸ்துவினுடைய நண்பர்களும் அவரை கைவிட்டுச் சென்றனர்.

நாமும் அப்படியே நண்பர்களால் கைவிடப்படுவோம். நம்மிடத்தில் உள்ள ஆஸ்தி தீர்ந்ததும் சிலர் நம்மை விட்டு செல்வார்கள். தைரியம் இல்லாமையினால் சிலர் நண்பர்களை கைவிட்டுச் செல்வார்கள் யூதாஸ் கிறிஸ்துவோடு உண்டு உறங்கி மூன்றரை ஆண்டுகாலம் அவர் அன்பை ருசித்துவிட்டு கேவலம் 30 வெள்ளிக்காசுக்காக அவரைக் காட்டிக்கொடுக்க முன்வந்தான். நம்முடைய யோபுவின் நிலையைப் பாருங்கள். ‘‘என் பந்து ஜனங்கள் விலகிப்போனார்கள். என் சினேகிதர் என்னை மறந்துவிட்டார்கள். என் வீட்டு ஜனங்களும் என் வேலைகாரிகளும் என்னை அந்நியனாக எண்ணுகிறார்கள். என் பிராண சிநேகிதர் எல்லோரும் என்னை வெறுக்கிறார்கள். நான் சிநேகித்தவர்கள் எனக்கு விரோதியானார்கள்” (19:14-19).



எல்லோராலும்
கைவிடப்படும்போதுதான்,
நாம் தேவனை நெருங்கி
பற்றிக்கொள்வோம்.

எல்லோராலும் கைவிடப்படும்போதுதான் நாம் தேவனை நெருங்கி பற்றிக்கொள்வோம். நாம் கிறிஸ்துவுக்குள் நெருங்கி ஜீவிக்கிறவர்களானால் இந்த வாக்குதத்தத்தால் தேற்றப்படுவோம். ‘‘நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னை கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே. அதினால் நாம் தைரியம் கொண்டு, கர்த்தர் எனக்கு சகாயர் நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே” (எபி 13:5,6)

கடைசியாக யோபு, அசட்டை பண்ணப்பட்டு அவமானச் சின்னமாக்கப்பட்டான். யோபுவுக்குக் கிடைத்த பரிசைப் பாருங்கள். “சிறு பிள்ளைகளும் என்னை அசட்டை பண்ணுகிறார்கள். நான் எழுந்தால் எனக்கு விரோதமாய் பேசுகிறார்கள்” (யோபு 19:18).

“இப்பொழுது நான் அவர்களுக்கு பாட்டும் பழமொழியும் ஆனேன். என்னை அருவருத்து, எனக்கு துாரமாகி என் முகத்துக்கு முன்பாகத் துப்பு கூசாதிருக்கிறார்கள் (30:9,10). இப்படி சரீர பிரகாரமான துன்பத்தினைக் காட்டிலும் அதிகமான வியாகுலத்தை அடைந்திருப்பான். காரணம் அநியாயமாக அக்கிரமக்காரன் என்று எண்ணப்பட்டான். சிலர் இப்படியொரு சந்தர்ப்பத்திற்காகவே காத்து கொண்டிருந்திருப்பார்கள்.

ஆவிக்குரிய விஷயத்தில் வைராக்கியமுள்ள அவனை, தங்களைக் காட்டிலும் தேவ பக்தியுள்ள அவனை, ஒன்றுமில்லாமற் செய்யும் பணியில் நான், நீ என்று போட்டிபோடாமலா இருப்பார்கள்?

இப்படிப்பட்ட, இதற்கு மேலான துன்பத்தை கிறிஸ்து கல்வாரி சிலுவையிலே அனுபவித்தார். சாத்தான் ஆவிக்குரிய இந்த பெரிய மனிதனை, தேவனுடைய குமாரனையே தோற்கடித்துவிட்டதாக எண்ணி இறுமாந்திருந்தான். ''அப்பொழுது அவருடைய முகத்தில் துப்பி, அவரை குட்டினார்கள். சிலர் அவரைக் கன்னத்தில் அறைந்து "கிறிஸ்துவே! உம்மை அடித்தவன் யார் அதை ஞானதிருஷ்டியினால் சொல்லும்'' என்றார்கள் (மத் 26:67, 68).

"அப்பொழுது பிலாத்து பரபாசை அவர்களுக்கு விடுதலையாக்கி இயேசுவையோ வாரினால் அடிப்பித்து, சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக்கொடுத்தான். அப்பொழுது தேசாதிபதியின் போர்ச்சேவகர் இயேசுவைத் தேசாதிபதியின் அரண்மனையிலே கொண்டு போய், போர்ச்சேவகரின் கூட்டம் முழுவதையும் அவரிடத்தில் கூடிவரச்செய்து, அவர் வஸ்திரங்களை கழற்றி சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி, முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி, அவர் சிரசின் மேல் வைத்து, அவர் வலது கையில் ஒரு கோலைக் கொடுத்து, அவர் முன்பாக முழங்காற்படியிட்டு, யூதருடைய ராஜாவே வாழ்க என்று அவரை பரியாசம் பண்ணி, அவர்மேல் துப்பி, அந்த கோலை எடுத்து அவரை சிரசில் அடித்தார்கள். அவர் அடைந்த ஆக்கினையின் முகாந்தரத்தை காண்பிக்கும் பொருட்டு, 'இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு' என்று எழுதி அவர் சிரசுக்கு மேலாக வைத்தனர். அப்பொழுது அவருடைய வலது பக்கத்தில் ஒருவனும் அவருடைய இடது பக்கத்தில் ஒருவனுமாக இரண்டு கள்ளர் அவரோடே கூடச் சிலுவைகளில் அறையப்பட்டார்கள். இந்த வழியாய் நடந்து போகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி, தேவாலயத்தை இடித்து மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே உன்னை நீயே ரட்சித்துக்கொள். நீ தேவனுடைய குமாரனானால், சிலுவையிலிருந்து இறங்கிவா என்று அவரை தூஷித்தார்கள்" (மத் 27:26-40).

இதுதான் மிகப்பெரிய சகிக்கமுடியாத சோதனை. கொடுமையிலும் கொடுமை. சரீரப் பிரகாரமான கஷ்டத்தை தாங்கிக் கொள்ளலாம். ஆனால் முறிந்துபோன ஆவியை யாரால் தாங்கக் கூடும்? ''கிறிஸ்து தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு அவமானத்தை எண்ணாமல் சிலுவையை சகித்து" என்று எபி.12:2ல் அதன் ஆசிரியர் கூறுகிறார்.

- (தொடரும்)

# 12 எல்லாரும் தீர்க்கதரிசிகளா?

## 1 கொரிந்தியர் 12: 29

பவுல் கேட்ட கேள்விகளில் ஒன்று ''எல்லாரும் தீர்க்கதரிசிகளா?''. இதற்கான பதில் ''இல்லை''. வேதாகமத்தில் முதன் முதலாக ''தீர்க்கதரிசி'' என்று அறிமுகப்படுத்தப்பட்டவர் ஆபிரகாம் (ஆதியாகமம் 20:7). ஆனாலும் ஒரு முறையான நிலைபாடு மோசேயிலிருந்து மட்டுமே துவக்கம் பெற்றது (உபாகமம் 18:15, 18-22). வேதாகமத்தில் ஏராளமான தீர்க்கதரிசிகள் தீர்க்கதரிசன ஊழியத்தைச் செய்துள்ளனர். ஏசாயா துவக்கம் மல்கியா வரையிலான 16 தீர்க்கதரிசிகள் தீர்க்கதரிசன புத்தகங்களை எழுதியோ, அல்லது பிறரைக் கொண்டு எழுதப்பட்டோ அவர்களுடைய பெயர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தீர்க்கதரிசிகள் மக்களுக்காக தேவனிடத்திலிருந்து வரும் செய்திகளையும் நிகழ்வுகளையும் முன்னுரைப்பவர்களாக இருந்தனர். ஆகிலும் அவர்களுடைய போதனைகளில் முக்கால நிகழ்வுகளும் உதாரணமாகவோ, உவமையாகவோ, உருவகமாகவோ பயன்படுத்தப்பட்டன. மேலும் இவர்கள் மக்களுக்காக ராஜாக்களிடம் பேசுபவர்களாகவும், ஜனங்களுக்க நியாயாதிபதிகளாகவும் இருந்துள்ளனர். ஏலி, சாமுவேல் போன்றவர்கள் கூடவே ஆசாரிய ஊழியத்தையும் செய்யக் கூடியவர்களாய் இருந்துள்ளனர்.

தேவ சந்நிதியில் ஜனங்களுக்காக வாழ்ந்த இவர்கள் மூலம் (யாத்திராகமம் 18:19; எண் 27:5). அநேக அற்புதங்களும் அடையாளங்களும் தேவன் நடப்பித்தார். ஆகிலும் பழைய ஏற்பாட்டு தீர்க்க தரிசிகளின் வரிசையில் வந்த கடைசி தீர்க்கதரிசியான யோவான் ஸ்நானகன் எந்த அற்புதத்தையும் நடப்பிக்கவில்லை (யோவான் 10:14). அன்று வாழ்ந்த தேவனுடைய தீர்க்கதரிசிகள் "தேவனுடைய மனுஷன்" ''ஞானதிஷ்டிகாரன்'' என்றெல்லாம் அழைக்கப்பட்டார்கள் (உதாரணம், 2 இராஜாக்கள் 5:13,14; 1 சாமுவேல் 9:9,10).

கள்ள தீர்க்கதரிகளும் இருந்தார்கள். அவர்கள் அஞ்சனம் பார்க்கிறவர்களாக, குறி சொல்லுகிறவர்களாக இன்னும் பல அஞ்ஞானக் காரியங்களை நடப்பித்து ஜனங்களை தேவனிடத்திலிருந்து திருப்பும் சக்திகளாக செயல்பட்டுள்ளனர் (உபா 18:9-14). அவர்களின் தீர்க்க தரிசனமெல்லாம் அவர்களின் மனதில் தோன்றியவைகளே; தேவனால் ஏவப்பட்டவைகள் அல்ல.

இப்படிப்பட்டவர்களைக் குறித்து எசேக்கியேலிடம் தேவன், ‘‘மனுபுத்திரனே, தீர்க்கதரிசனம் சொல்லுகிற இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகளுக்கு விரோதமாக நீ தீர்க்கதரிசனம் உரைத்து, தங்கள் இருதயத்தில் இருக்கிறதையே எடுத்துத் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவர்களோடே நீ சொல்ல வேண்டியது என்னவென்றால்: கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள். கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது: தாங்கள் ஒன்றும் தரிசியாதிருந்தும், தங்களுடைய ஆவியின் ஏவுதலைப் பின்பற்றுகிற மதிகெட்ட தீர்க்கதரிசிகளுக்கு ஐயோ!

இஸ்ரவேலே, உன் தீர்க்கதரிசிகள் வனாந்தரங்களிலுள்ள நரிகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். நீங்கள் கர்த்தருடைய நாளிலே நிலை நிற்கும்படிக்கு, திறப்புகளில் ஏறினதுமில்லை; இஸ்ரவேல் வம்சத்தாருக்காகச் சுவரை அடைத்ததுமில்லை. கர்த்தர் தங்களை அனுப்பாதிருந்தும், கர்த்தர் உரைத்தார் என்று சொல்லி, அவர்கள் அபத்தத்தையும் பொய்க்குறியையும் தரிசித்து, காரியத்தை நிர்வாகம் பண்ணலாமென்று நம்பிக்கையாயிருக்கிறார்கள். நான் உரைக்காதிருந்தும், நீங்கள் கர்த்தர் உரைத்தார் என்று சொல்லும்போது, அபத்தமான தரிசனத்தை தரிசித்து, பொய்க்குறியைச் சொல்லுகிறீர்கள் அல்லவா?



தேவனுடைய
வசனத்திற்கான
பசி குறைபடும் இடத்தில்,
அது பேசுபவரிடத்தில் அல்ல
கேட்பவரிடத்திலேயே குறைவு
உள்ளது.

ஆகையால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால்: நீங்கள் அபத்தமானதைச் சொல்லி, பொய்யானதைத் தரிசிக்கிறபடியினால், இதோ நான் உங்களுக்கு விரோதமானவர், என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். அபத்தமானதை தரிசித்து, பொய்க்குறியைச் சொல்லுகிற தீர்க்கதரிசிகளுக்கு என் கை விரோதமாயிருக்கும்; அவர்கள் என் ஜனத்தின் சங்கத்தில் இருப்பதுமில்லை; இஸ்ரவேல் வம்சத்தாரின் அட்டவணையில் எழுதப்படுவதுமில்லை இஸ்ரவேல் தேசத்துக்குள் பிரவேசிப்பதுமில்லை; அப்பொழுது நான் கர்த்தராகிய ஆண்டவரென்று அறிந்து கொள்ளுவீர்கள்” (எசேக்கியேல் 13:1-9). இன்று தங்களை தீர்க்க தரிசிகள் என்று சொல்லித்திரியும் கூட்டத்தை இந்த வசனங்களுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். அவர்களின் பொய் வெளியரங்கமாகும்.

புதிய ஏற்பாடு போதிக்கும் தீர்க்கதரிசன வரம் பழைய ஏற்பாட்டிலிருந்து அநேக

வழிகளில் வித்தியாசப்பட்டிருந்தது. பழைய ஏற்பாட்டு அமைப்பு புதிய ஏற்பாட்டு தீர்க்க தரிசன ஊழியத்தில் குறிப்பிடப்படவில்லை. ஒரு தீர்க்கதரிசி மற்றொரு தீர்க்கதரிசியால் அபிஷேகம் பெற்று தீர்க்கதரிசன ஊழியத்துக்கு வரவில்லை. மாறாக, ஆவியானவரின் வரங்களாலே தீர்க்கதரிசன ஊழியத்துக்கு கிறிஸ்தவர்கள் பயன்படுத்தப்பட்டார்ள். அது அப்போஸ்தலர் தங்கள் கைகளை வைக்குதல் மூலம் அந்த வரத்தையும் பெற்றார்கள்.

அப்போஸ்தலர் தங்கள் கைகளை வைத்த போது எபேசுவிலிருந்த விசுவாசிகள் அந்நிய பாஷைகளைப் பேசி தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள் (அப் 19:6). அகபு என்னும் தீர்க்க தரிசியும் பிலிப்புவின் குமாரத்திகளும் யோவேல் 2:28,29ல் சொல்லப்பட்டபடி தீர்க்கதரிசனஞ் சொன்னார்க்ள (அப்போஸ்தலர் 21:9-11). அகபு தீர்க்கதரிசி பவுலைக் குறித்துச் சொன்னவை பின்னதாக அப்படியே நிறைவேறிற்று, (அப் 21:10-40). உபாகமம் 18:22 ல் மோசே குறிப்பிட்டபடி ஒரு தீர்க்கதரிசி கர்த்தரின் நாமத்தினாலே சொல்லும் காரியம் நடவாமலும் நிறை வேறாமலும் போனால், அது கர்த்தர் சொல்லாத வார்த்தை; அந்த தீர்க்கதரிசி அதை துணிகரத்தினால் சொன்னான்; அவனுக்கு நீ பயப்பட வேண்டாம் என்று முன்னுரைத்து, அப்படியே நிறை வேறுகிற தீர்க்கதரிசனம் யாரிடமும் இல்லை.

தன்னை தீர்க்கதரிசி என்று இன்று சொல்லிக் கொள்ளுகிறவர் எசேக்கியேல் 13-ல் நாம் பார்த்தபடி தன் மனதில் தோன்றுவதையும் சூழ்நிலைகளை யோசித்தும் கேள்விபட்டவைகளையும் மனதில் வைத்து பேசுவதை கண்கூடாகக் காண்கிறோம். கடந்த ஒரு காரியத்தை கர்த்தர் தனக்கு ஏற்கனவே அறிவித்ததாக பொய் பேசுகிறார்கள். நூற்றுக்கணக்கான வருஷங்களுக்கு முன் முன்னுரைத்த தீர்க்க தரிசனமெல்லாம் துல்லியமாக நிறைவேற்றியிருக்க அடுத்த சில நிமிடங்களில் நடக்க விருந்த தன் மகள் உயிர் இழப்பாள், மிகப் பயங்கரமாக காலமடைவாள் என்றோ, ஒரு 20 ம் நூற்றாண்டு தீர்க் தரிசி என அழைத்துக் கொண்டவரால் யூகிக்க கூட முடியவில்லை.

ஒரு அரசியல் தலைவர் சிந்தன் என்பது அவரது பெயர். தமது உள்ளுணர்வால் அன்று அவர் கலந்து கொள்ள விருந்த கூட்டத்தில் தாக்கப்படுவதை உணர்ந்து தன் மனைவி மக்களிடம் சொல்லிவிட்டுச் சென்றார். தன் மனைவி மக்களிடம் சொல்லி விட்டுச் சென்றார். அதே போல அவர் பலத்த காயமுற்று மருத்துவமனையில் சென்னை ஸ்டாலின் மருந்துவமனையில் சிகிச்சை பெற்றார். மேற்குறித்த 20ம் நூற்றாண்டு தீர்க்கதரிசியால் இந்த உள்ளுணர்வைக் கூட பெற்றுக்

கொள்ள முடியவில்லை. கிறிஸ்தவத்திற்கு வெட்கத்தை உண்டு பண்ணுபவர்கள். இப்படிப்பட்டவர்கள் கள்ளத்தீர்க்கதரிசிகள் இன்று தங்களைத் தீர்க்க தரிசிகள் என்று கூறிக்கொள்ளும் எல்லாருமே தங்களுக்கு ஆதாயம் தரும் ஒரு காரியத்தைத் தொடங்க, தேவையான பண விவரங்களை கர்த்தர் தனக்கு வெளிப்படுத்தினதாகச் சொல்லி கபடற்றவர்களின் மூளையைச் சலவை செய்து, கோடிக்கணக்கில் பணத்தைச் சுருட்டுவதே இவர்களின் ஆவியின் ஏவுதல். பரிசுத்த ஆவியின் ஏவுதலல்ல. ஏராளமான நிகழ்ச்சிகளை இப்படிக் குறிப்பிட முடியும்.

அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்து போம் அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்து போம். நம்முடைய அறிவு குறைவுள்ளது. நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுவதும் குறைவுள்ளது. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம் (1 கொரிந்தியர் 13:8-10) இப்படிப்பட்ட வேத வசனங்களின் தெளிவான உபதேசம் இவர்களுடைய கண்களை ஏன் திறக்க வில்லை என்று தெரியவில்லை. கள்ளத் தீர்க்க தரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள் (மத்தேயு 7:22) ஏனெனில் கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப் பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும், நடப்பிப்பார்கள் (மத்தேயு24:24). அவை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமைகளோடும் அடையாளங்களோடும் நடக்கும் (1 தெசலோனிக்கேயர்2:9).

பிரியமானவர்களே, அடுத்த இதழில் எல்லாரும் குணமாக்கும் வரங்களையுடைவர்களா? ஆராய ஆயத்தமாயிருங்கள்.

(தொடரும்)

**இ.ஏ.ஆறுமுகம் (போதகர்)**
திண்டுக்கல்.

# வாசகர் கடிதம்

ஐயா, தாங்கள் மாதந்தோறும் தவறாமல் கிருபையுள்ள வார்த்தை இதழ் அனுப்பி வைப்பதற்காக தங்களுக்கு நன்றி. மேலும், கேள்விக்கு விடை எழுதுவதால் வேத அறிவு பெருகுகிறது. மேலும் இதழில் வரும் செய்திகள் எல்லாம் ஆத்தும வளர்ச்சிக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கிறது. உங்கள் ஊழியத்திற்காக தினசரி ஜெபிக்கிறேன்.

**S. ஜெயராஜ்** (கோவை)

# புதிய ஏற்பாட்டில் சபையின் உருவாக்கங்களும், பெயர்களும்

**கிறிஸ்துவின் அவயவங்கள் என்ற வகையில்** 1கொரிந்தியர் 6:15

உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா? அப்படியிருக்க, நான் கிறிஸ்துவின் அவயவங்களை வேசியின் அவயவங்களாக்கலாமா? அப்படிச் செய்யலாகாதே.

**தலையாகிய கிறிஸ்துவின் சரீரம் என்ற வகையில்** எபேசியர் 5:23,24

கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்.

**கொலோசெயர் 1:18**

அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்.

**கிறிஸ்துவின் மணவாட்டி என்ற வகையில்** 2 கொரிந்தியர் 11:2

நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக் கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காக தேவ வைராக்கியமான வைராக்கியங்கொண்டிருக்கிறேன்.

**எபேசியர் 5:23**

கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்.

**கிறிஸ்துவிடமிருந்து வந்த கடிதம் (நிருபம்) என்ற வகையில்**

2 கொரிந்தியர் 3:2,3

எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே. ஏனெனில் நீங்கள் எங்கள் ஊழியத்தினால் உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்களென்று வெளியரங்கமாயிருக்கிறது. அது மையினாலல்ல, ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினாலும்; கற்பலகைகளிலல்ல, இருதயங்களாகிய சதையான பலகைகளிலேயும் எழுதப்பட்டிருக்கிறது.

**கிறிஸ்துவின் சுகந்த வாசனை என்ற வகையில்** 2 கொரிந்தியர் 2:14

கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும்

எங்களை வெற்றி சிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக் கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.

**இயேசுவைக் கர்த்தரென்று அறிக்கையிடுபவர்கள் என்ற வகையில்** ரோமர் 10:9, 10

என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்.

**கிறிஸ்துவின் பின்பற்றாளர்கள் என்ற வகையில்** மாற்கு 9:41

நீங்கள் கிறிஸ்துவின் உடையவர்களாயிருக்கிற படியினாலே, என் நாமத்தினிமித்தம் உங்களுக்கு ஒரு கலசம் தண்ணீர் குடிக்கக் கொடுக்கிறவன் தன் பலனை அடையாமற்போவதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

**கிறிஸ்துவின் சீஷர்கள் என்ற வகையில்** அப்போஸ்தலர் 11:26

அவர்கள் ஒரு வருஷ காலமாய்ச் சபையோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு உபதேசம் பண்ணினார்கள். முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று.

**கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் என்ற வகையில்** 1 கொரிந்தியர் 4:1

இப்படியாக, எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரரென்றும் எண்ணிக் கொள்ளக்கடவன்.

**கிறிஸ்துவின் ஸ்தானாபதிகள் என்ற வகையில்** 2 கொரிந்தியர் 5:20

ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக்கொண்டு புத்தி சொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.

## மருத்துவக் குறிப்பு

**ஒத்தடங்கள் :**
உடலில் ஏதாவது ஒரு பாகத்தில் உள்ள அழற்சியோ, அல்லது வெளிப்பகுதி அடிபட்டு வீக்கமோ, பிற உபாதையோ இருப்பின், ஒரு தூய பருத்தியிலான துண்டை, குளிர் நீரிலோ அல்லது வெந்நீரிலோ நனைத்து, அப்பகுதியில் ஒத்தியோ அல்லது அழுத்தியோ சிகிச்சை செய்ய வேண்டும். இது ஒரு பழங்கால சிகிச்சை முறையாகும்.

**அவரில் நிலைத்திருத்தல் என்ற வகையில்** 1யோவான் 2:27

நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையுங் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக.

**கிறிஸ்துவால் அனுப்பப்பட்டவர்கள் என்ற வகையில்** மாற்கு 16:15, 16

பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.

**கிறிஸ்துவுக்குச் சாட்சிகள் என்ற வகையில்** 3 யோவான் 3

சகோதரர் வந்து நீ சத்தியத்தில் நடந்து கொள்ளுகிறாய் என்று உன்னுடைய உண்மையைக் குறித்துச் சாட்சி கொடுத்தபோது மிகவும் சந்தோஷப்பட்டேன்.

**3 யோவான் 6**

அவர்கள் உன்னுடைய அன்பைக் குறித்துச் சபைக்கு முன்பாகச் சாட்சி சொன்னார்கள்; தேவனுக்கு முன்பாகப் பாத்திரமானபடி அவர்களை நீ வழிவிட்டனுப்பினால் நலமாயிருக்கும்.

**திராட்சச் செடியின் கொடிகள் என்ற வகையில்**

யோவான் 15:5

நானே திராட்சச் செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது.

**பரிசுத்த ஆவியானவருடன் தொடர்புடையவை (3)**

**ஆவியானவர் வாசம் பண்ணுகிறவர்கள் என்ற வகையில்**

1கொரிந்தியர் 3:16

நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?

**ஆவியானவரால் பிறந்தவர்கள் என்ற வகையில்** யோவான் 3:5

இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.

**பரிசுத்த ஆவியானவரின்படி நடந்து கொள்கின்றவர்கள் என்ற வகையில்** ரோமர் 8:3,4

அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப் பிரமாணம் செய்யக்கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப் பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்.

**கிறிஸ்தவர்களுடன் தொடர்புடையவை (61)**

ஏற்படுத்தப்பட்ட உறுதிப்பாட்டின் படியானவை (33)

**வழியென்ற வகையில்** அப்போஸ்தலர் 9:1, 2

சவுல் என்பவன் இன்னுங் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய்; இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும், ஸ்திரீகளையாகிலும் தான் கண்டு பிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டு வரும்படி, தமஸ்குவிலுள்ள ஜெப ஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான்.

(அப். 19:9, 23; 22:4, 24:14, 22 ஆகியவற்றையும் காணவும்)

**பூமிக்கு உப்பு என்ற வகையில்** மத்தேயு 5:13

நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப் போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது.

**தூணும் ஆதாரமும் என்ற வகையில்** 1தீமோத்தேயு 3:14, 15

நான் உன்னிடத்திற்குச் சீக்கிரமாய் வருவேனென்று நம்பியிருக்கிறேன். தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது.

**சாத்தானுக்கெதிராகப் போராடுபவர்கள் என்ற வகையில்** எபேசியர் 6:12, 13

ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகாரலோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்.

**சுடர் என்ற வகையில்** பிலிப்பியர் 2:14, 15

நான் வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு, ஜீவ வசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப் போலப் பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும், கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு.

(மத். 5:14; அப். 13:47; எபே. 5:8; 1தெச. 5:5; 1 பேது. 2:9 ஆகியவற்றையும் காணவும்.)

**விசுவாசிகள் என்ற வகையில்** எபேசியர் 1:1

தேவனுடைய சித்தத்தினாலே இயேசுகிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பவுல், எபேசுவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கு எழுதுகிறதாவது.

**நீதிக்கு அடிமைகள் என்ற வகையில்** ரோமர் 6:19

உங்கள் மாம்ச பலவீனத்தினிமித்தம் மனுஷர் பேசுகிற பிரகாரமாய்ப் பேசுகிறேன். அக்கிரமத்தை நடப்பிக்கும்படி முன்னே நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும், அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்ததுபோல, இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள்.

**ஒரே விசுவாசத்திற்கு நியமிக்கப்பட்டவர்கள் என்ற வகையில்** எபேசியர் 4:5

ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும்.

**அப்போஸ்தலர் 6:7**

தேவவசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று; ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படிந்தார்கள்.

**வளருகின்ற சரீரம் என்ற வகையில்** எபேசியர் 4:14-16

நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினிலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். அவராலே சரீரம் முழுவதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத் தக்கதாய்க் கிரியை செய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது.

# 5 கர்த்தரால் கூடாத காரியம் உண்டோ?

## Is Anything Too Hard for thd Lord?

### ஆதியாகமம் 18:14 (Genesis 18:14)

**அறிமுகம்:**

அ) சாராள் கர்த்தரிடம் கேள்வி கேட்டபோது, அவர் "கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ?" என்று கூறினார்.

ஆ) இன்று தேவன் அற்புதங்களை செய்வதில்லை என்று நமக்குத் தெரியும், ஆனாலும் அவர் நம்முடைய வாழ்வில் இன்னும் செயல்படுகிறார்.

இ) நம்முடைய வாழ்க்கையில் சில காரியங்களை நாம் சந்திக்கின்ற வேளையில், அவரிடம் கேள்வி கேட்கும்போது, சந்தேகமின்றி அவர் கூறுவது, "கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ?" என்கிறார்.

**I) தேவன் நம்முடைய பக்கத்தில் இருக்கிறார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.**

அ) ரோமர் 8:31

ஆ) 2 தீமோ 4:17

**II) இஸ்ரவேலின் பரிசுத்தரை நாம் "கட்டுப்படுத்த" முடியும் என நாம் புரிந்துகொள்ள முடியும்.**

அ) சங் 7

ஆ) மத்தேயு 25:24-30

**III) "கிறிஸ்துவினாலே என்னால் எல்லாவற்றையும் செய்ய முடியும்" என்ற கொள்கையை நாம் புரிந்து கொள்ள முடியும்.**

அ) எபேசியர் 6:10

ஆ) பிலிப்பியர் 4:1

**இறுதியாக:-**

அ) இல்லை, தேவனால் கூடாத காரியம் ஒன்றுமே இல்லை.

ஆ) நாம் அவரை நம்பாலும், கீழ்படியாமலும் இருக்கும்போது, அவருக்கு எந்த காரியத்தையும் கூடாததாக மாற்ற முடியும்.

நீங்கள் கிறிஸ்துவையும் அவருடைய வார்த்தைகளையும் விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை அறிக்கை செய்து, உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும்படியாக ஞானஸ்நானம் பெறும்போது, கிறிஸ்துவின் சபையின் அங்கமாக முடியும் !

# நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என தேவன் விரும்புகிறார்

## God Wants you to be Saved

**உங்களைப் பற்றிய தேவனுடைய விருப்பம்**

நீங்களும் நானும் இரட்சிப்படைய வேண்டும் என தேவன் விரும்புகிறார். இதை நாம் எப்படி தெரிந்து கொள்ள முடியும்? ஏனெனில், பைபிள் அவ்வாறே கூறுகின்றது. தேவனைப் பற்றி பைபிள் கூறும்போது, "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்". (1 தீமோ 2:4). பின்னும் பைபிள் கூறுவது என்னவெனில், தேவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான மத்தியஸ்தர் இயேசு கிறிஸ்து என்றும், நம் எல்லோருக்காகவும் அவர் தம்மைத்தாமே பலியாக ஒப்புக்கொடுத்தார் என்றும் கூறுகிறது (1 தீமோ 2:5,6). இது ஒரு சிறப்புச் செய்தி.

**உங்களுக்கான தேவனுடைய அன்பு**

நாம் இரட்சிக்கப்படும்படி தேவன் விரும்புவதற்கு எது அவரை ஊக்குவிக்கிறது? நம்மீதான அவருடைய மிகப் பெரிய அன்பு. "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்", (ரோ 5:8). மேலும், 1 யோ 4:9ல் சொல்லப்பட்ட செய்தியை நீங்கள் வாசித்தோ, கேள்விப்பட்டோ இருக்கிறீர்களா?. அப்பகுதி இவ்வாறு கூறுகிறது, "தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது".

**உங்களுக்கான தேவனுடைய கிருபை**

தேவனுடைய கிருபையே நம்முடைய இரட்சிப்பிற்கு காரணமானது என்ற முடிவுக்கு வருவது ஏற்றதாக இருக்குமா? நிச்சயமாக! ''கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு'' (எபே 2:8). தேவனுடைய கிருபையில்லாமல் மனிதன் இரட்சிப்படைவது கூடாத காரியம் என்பது தெளிவானது. அப்படியானால், கிருபை என்றால் என்ன? கிருபை என்பது 'தகுதியற்றவருக்கு கிடைக்கும் தயவு',

அதாவது, நம்மால் சம்பாதிக்க இயலாத இரக்கம். ஆகையினால், தேவனுடைய கிருபையினாலே நமக்கு தகுதியில்லாத ஒன்றை அவர் நமக்குத் தருகிறார். நாமாகவே, நம்முடைய இரட்சிப்பை நீங்களும், நானும் பெற முடியுமா? முடியாது! நாமாகவே நம்மை பாவத்திலிருந்து இரட்சித்துக் கொள்ளும்படியாக திட்டத்தை வகுக்க முடியாதா என்ன? அப்போதும் பதில், 'இல்லை' என்பதே!.

**உங்களுக்கான தேவனுடைய இரட்சகர்**

புதிய ஏற்பாடு நமக்கு கொடுக்கும் விபரங்கள் கீழே கொடுக்கப்படுகிறது: தேவன்(கடவுள்) நம்மீது வைத்த அன்பின் காரணமாக, எல்லா மனிதரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்ற விருப்பத்தினால், அவருடைய கிருபையினால், அவருடைய குமாரனை பூமிக்கு அனுப்பினார். சரி, இயேசுவை (கடவுளின் குமாரன்) அனுப்பியதின் முக்கியமான நோக்கம் என்ன?. "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான்" (1 தீமோ 1:15). சரி, ஏன் தேவ குமாரனுக்கு "இயேசு" என்ற பெயர் வழங்கப்பட்டது? ஏனெனில், 'இயேசு' என்றால் 'இரட்சகர்' என்பது அர்த்தம் என்பதே காரணம்: "....... அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" (மத் 1:21).

**நம்முடைய மிகப்பெரிய தேவை**

"பாவம்" என்பதைப் பற்றி பைபிள் என்ன கூறுகிறது என உங்களுக்குத் தெரியுமா? "பிரமாணத்தை மீறுவதே பாவம்" என பைபிள் கூறுகிறது (1 யோ 3:4). ஆகையால், தேவனுடைய (கடவுள்) சட்டத்தை மீறுகிற யார் ஒருவரும் 'பாவி' தான். சரி, பாவிகள் என்ற பிரிவில் உள்ளடங்குவோர் யார்? "எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி" (ரோமர் 3:23).

மனிதனுடைய மிகப்பெரிய தேவை, பாவத்திலிருந்து இரட்சிப்படைய வேண்டும் என்பதே. பாருங்கள், பைபிளில் எழுதப்பட்டிருக்கிறபடி, பாவம் என்பது மனிதனை, தேவனிடத்திலிருந்து பிரிக்கிறது.

"உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது" (ஏசாயா 59:2). இந்த பாவத்தினால் வரும் மிக கொடூரமான நிலை என்ன தெரியுமா? தேவனிடமிருந்து நாம் பிரிக்கப்படுவதே!

சரி, இப்படி கடவுளிடமிருந்து பிரிந்திருப்பது நம்மை நம்பிக்கையில்லாத ஒரு நிலைக்கு தள்ளுகிறதா? ஆம், ஆனால், இயேசுவின் மூலம் நமக்கு நம்பிக்கை உள்ளது! நினைவில் கொள்வோம், இயேசு இவ்வுலகிற்கு பாவிகளை இரட்சிக்கும்படியாக வந்தார். மேலும், அதை எவ்வாறு அவர் நிறைவேற்றினார்? கல்வாரி சிலுவையிலே மரித்து, நம்முடைய பாவங்கள் கழுவப்படும்படியாக தன்னுடைய இரத்தத்தை சிந்தியதின் மூலமே. இயேசுவின் இரத்தத்தின் மூலமாக நாம் நீதிமானாக முடியும், (அல்லது) தேவனிடம் ஒப்புரவாகிறோம். இந்த பைபிள் வார்த்தைகளை கவனியுங்கள், ''இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால்,........... (ரோ 5:9,10).

சரி, பாவமன்னிப்பைப் பெற்று தேவனிடம் ஒப்புரவாவதற்கு வேறு வழியே இல்லையா? இல்லை. இயேசு சொன்னார், ''.....நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவான் 14:6).

**எல்லா மனிதருமே இரட்சிக்கப்படுவார்களா?**

இயேசு தன்னையே எல்லாருக்காகவும் விலையாகக் கொடுத்தாரானால், அதின் அர்த்தம், எல்லாருமே இரட்சிக்கப்பட்டு பரலோகம் சென்றுவிடுவார்களா? இதைப் பற்றி இயேசு என்ன சொல்கிறார் என்று கவனியுங்கள்: ''இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள், கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருகிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்'' (மத் 7:13,14). மேலும் இயேசு கூறுகையில், "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" என்றார் (மத் 7:21).

**உங்களுடைய பதில் செயல் என்ன?**

இயேசு, இரட்சிப்படையும்படி எல்லா

மனிதரையும் தன்னிடத்தில் இவ்வாறு கூறி அழைக்கிறார், “வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்” (மத்11:28). பரலோகத்தின் தேவன், இயேசு கிறிஸ்துவின் மூலமாக தான் கொடுக்கும் கிருபையைப் பெற்றுக் கொள்ளும்படி ஒருவரையும் கட்டாயப்படுத்துவதில்லை என்பதை தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள். நம்மில் ஒவ்வொருவரும், தேவனுடைய கிருபையை, அன்பை மற்றும் இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ சுதந்திரம் (அல்லது) தேர்வு செய்யும் உரிமை பெற்றுள்ளோம். தேவன் (கடவுள்) தன்னுடைய வார்த்தை, அதாவது சுவிசேஷத்தின் மூலமாக ஜனங்களை அழைக்கவோ, சேர்க்கவோ செய்கிறார் (2 தெச 2:14; யோ 6:44,45). நீங்களும், நானும் சுவிசேஷ செய்தியை கேட்கையில், அதை ஏற்றுக்கொள்ளவோ, மறுக்கவோ அது நம் கையில்தான் உள்ளது. உங்களுடைய பதில் என்ன?. நீங்கள் இப்பொழுது, தேவன் தன்னுடைய குமாரன் மூலமாக கொடுக்கக் கூடிய இரட்சிப்பையும், ஆவிக்குரிய வாழ்வையும் ஏற்றுக்கொள்பவரா அல்லது நிராகரிப்பவரா?.

தொடரும்

பொதுவான செய்திகள்

# இரைப்பை புற்றுநோய்

❖ இந்நோய் அதிக பேரை பாதிப்பது இந்தியாவில், குறிப்பாக தமிழகத்தில் தான்.

❖ பசியின்மை, தொடர்ந்து எடைகுறைவு, ரத்தசோகை, கேன்சர் கட்டியிலிருந்து இரத்த கசிவதால் மலம் கருப்பாக கழிப்பது, வாந்தி போன்றவை அறிகுறிகளாகும்.

❖ இந்தநோய் வர காரணம் மது, புகைபிடித்தல், உணவில் உப்பின் அளவு அதிகமாக இருப்பது, உப்புகண்டம் போட்டு அதிக நாட்கள் வைத்திருந்து உண்பது, பதப்படுத்தப்பட்ட உணவைப் பொரிப்பதற்கு ஒரே எண்ணெயை பயன்படுத்துவது, ஊறுகாய் அதிக அளவு சாப்பிடுவது இதைவிட முக்கியம் புகைப்பிடிக்கும் 83 % பேருக்கு, மது அருந்தும் 84% பேருக்கும் இந்நோய் வருகிறது.

❖ புற்றுநோயால் பாதிக்கப்பட்ட யாவரும் குணமடைய ஜெபிப்போம். மேலும் புற்றுநோயை நோக்கி வேகமாக செல்லும் புகைப்பிடிப்பவர்களும் குடிப்பவர்களும் மனந்திரும்பி, புதுவாழ்வு பெற ஜெபிப்போம். குறிப்பாக கிறிஸ்துவை நம்புவோர் இந்த புற்றுநோயை உண்டாக்கும் தவறான உணவுப்பழக்கங்கள், சிகரெட், மதுபானம் ஆகியவற்றிற்கு எச்சரிக்கையாய் இருப்போம்.

# இயேசுவின் இரத்தம்

P.C.P.R.

பிரியமானவர்களே!

உங்கள் யாவரையும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்தி, சந்திப்பதிலே ஆண்டவருக்குள் அகதமகிழ்கிறேன். இந்த மாதம் நாம் இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தைக் (1பேதுரு 1:18, 19) குறித்து தியானிப்பதற்கு நமது கவனத்தை செலுத்துவோம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மாத்திரமே நமக்கு பாவ மன்னிப்பாகிய மீட்பை கொடுக்க கூடியது (எபே. 1:7). நீதியுள்ள தேவன், மனிதனின் பாவ விடுதலைக்காக தனது குமாரனின் இரத்தத்தை வழிமுறையாக தேர்ந்து கொண்டார். இயேசு கிறிஸ்துவே நமக்காக அடிக்கப்பட்ட ஆட்டுக் குட்டி (வெளி. 13:8) சிலுவை, நமதுபாவங்கள் தேவ குமாரனை எவ்வளவு வேதனைப்படுத்தியது என காணும் இடமாக உள்ளது.

## I. பாவத்தின் பெருங்கொடுமை

தேவன் மோசேயின் மூலம் கொடுத்த பிரமாணத்தில் உள்ள பலி முறைமை பற்றி லேவியராகமத்தில் கூறியுள்ளார். மேலும் இந்த புத்தகத்தில் ஆசாரியர்கள், செய்ய வேண்டிய பலிகள் மற்றும் இரத்தம் பற்றி கூறுகிறார்.

தேவன் பாவத்தின் மிகக் கொடுமையான தன்மை பற்றி பேசுகிறார் (ரோமர் 7:13). பாவம் என்பது தேவனுக்கு முரண்படுகிறது; தேவனை எதிர்த்து நிற்கிறது: அது கண்டு கொள்ளாமல் விடப்படக் கூடாததாயிருக்கிறது; மனம் வருந்தாத ஒவ்வொரு பாவியும் தண்டிக்கப்படுவார்.

எபி. 9:22ன் படி பழைய ஏற்பாட்டின் பாவ மன்னிப்பிற்கு மிருக இரத்தம் கொடுக்கப்பட்டது. ஆனால், பழைய ஏற்பாடு இயேசுவிடம் வழிநடத்தி வந்த வழித்துணையாளரே (கலா. 3:24,25); மேலும், நமது பாவத்திற்கான முழுமையான பலியாக இயேசுவே இருக்கிறார் (கலா. 3:22-29; ரோமர் 15:4;1கொரி. 10:11)

எபி. 10:4 ன் படி, பழைய ஏற்பாடு பலிமுறையின்படி மிருக இரத்தம் பாவத்தை எடுத்துப்போட இயலாததாக இருந்தது. மேலும், பத்து கட்டளைகளையும் முழுமையாக மனிதன் கடைபிடிக்க முடியாதவனாக இருந்தான் (அப். 15:8-11). மனிதன் தனக்காக செய்து கொள்ள இயலாததை தேவனே மனிதனுக்காக செய்தார்.

வேதாகமத்தில் 460 முறை இரத்தம் பற்றி கூறப்பட்டு உள்ளது. பைபிளை மிக கவனமாக படிக்கின்ற யாருமே, இயேசு என்னுடைய பாவ விடுதலைக்காக, மீட்புக்காக தன்னுடைய இரத்தத்தை சிந்தினார் என்பதை மறுக்கவோ, மறக்கவோ முடியாது. கடவுளையேகாவு கொண்ட பெருங்கொடுமையானது 'பாவம்' என்பதை நாம் யாவரும் உணர வேண்டியது அவசியம்.

## II குற்றமற்ற இயேசுவின் இரத்தம் :

1. நம்மை தேவனுடன் ஒப்புரவாக்குகிறது. (2 கொரி 5:14-21)

2. நம்மை பாவங்களற கழுவுகிறது (வெளி 1:5; 7-14)

3. நம்மை மீட்கிறது (எபே 1:7,1 பேதுரு 1:18,19)

4. நம்மை சுத்திகரிக்கிறது (1யோவா 1:7)

5. நம்மை நீதிமான்களாக்குகிறது (ரோ 5:8,19)



பாவம் என்பது தேவனுக்கு முரண்படுகிறது; தேவனை எதிர்த்து நிற்கிறது: அது கண்டு கொள்ளாமல் விடப்படக் கூடாததாயிருக்கிறது;

6. நம்மை பரிசுத்தப்படுத்துகிறது ( எபி 10:10; 13:12)

7. நமது பாவங்களை நிவர்த்தி செய்கிறது (1யோ 2:2)

8. நமக்கு சமாதானம் தருகிறது. (எபே 2:13-16, கொலே 1:20)

9. நம்மை சாத்தானை வெற்றி கொள்ள கூடியவர்களாக்குகிறது (வெளி 12:11)

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மாத்திரமே நமது பாவங்களுக்கான உண்மையான, வரலாற்றுப் பூர்வமான, முழுமையான மற்றும் கடைசியான விலை செலுத்துதலாக உள்ளது. யோவா 1:29,36 " இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி".

## III அவருடைய இரத்தத்தின் வல்லமை

1. கிறிஸ்துவினுடைய இரத்தத்திற்கு புதிய உடன்படிக்கையில் அதன் வல்லமையை காண்கிறோம். (மத்26:26-28;1 கொரி 11;25,26; எபி9) இயேசுவின் இரத்தத்தையும் அவரையும் காணத்தவறும்போது நீங்கள் பைபிளை தவறாக வாசிக்கிறீர்கள் என்று அர்த்தம் (ஆதி 4:2-12, மத் 23:35, லூக்கா 11:50,51) ஆபேலின் இரத்தம் பேசியதைக் காட்டிலும் மேன்மையானதை

இயேசுவின் இரத்தம் பேசுகிறது (எபி 12:24; 9:11-22)

2. புதிய ஏற்பாட்டு சபையை உருவாக்குவதில் அவரது இரத்தத்தின் வல்லமையை காண்கிறோம். (அப் 20:28; எப 5:25-28) பல இலட்சம் மிருகங்கள் பறவைகள் செலுத்தப்பட்டன. மிருக இரத்தம் மனித பாவத்தை ஒரு ஆண்டுக்கு முந்திய நிலையில் உருட்டி விடத்தான் முடிந்தது. ஆனால், இயேசுவின் இரத்தம், "சபை" என்ற மகிமையுள்ள ஒரு காரியத்தை வாங்கி உள்ளது.

இரத்தத்தில் உயிர் இருப்பதாக வேதாகமம் (லேவி 17:11,14) கூறுகிறது. நமது பாவங்களிலிருந்து நம்மை விடுவிக்க இயேசு தமது இரத்தத்தைக் கொடுத்தார். (வெளி. 1:5) நாம் நித்தியமாக வாழ்வதற்கு அவர் சிலுவையின் மீது நமக்காக மரித்தார் (1 தெச 5:10). சில பொருட்களின் விலையானது அதன் மதிப்பில் வளர்கிறது. அப் 20:28ன் படி கிறிஸ்து அவருடைய இரத்தத்தினாலே தனது ஒரே சபையை வாங்கினார் என்பது "சபை" எவ்வளவு மதிப்புள்ளது என்பதை நாம் அறிய முடிகிறது. சபையை குறைத்து மதிப்பிடுவது, இயேசுவின் இரத்தத்தின் மகிமையை குலைப்பதாக உள்ளது.

3. புதிய ஏற்பாட்டில் இராபோஜனத்தில், நாம் அவருடைய இரத்தத்தின் வல்லமையை காண்கிறோம். (அப் 2:42, 1 கொரி 10:16-21; 11:24-30) ஒரே வழி: ஒரே சரீரம் (சபை), ஒரே அப்பம், ஒரே இரத்தம், ஒரே இராபோஜனம், ஒரே ஜீவன்.

இயேசுவின் இரத்தம், சிலுவை தந்த கனி; இதற்கு எல்லையற்ற வல்லமை உண்டு. இயேசுவின் திருவிருந்து (கர்த்தரின் பந்தி) அவர் மீண்டும் வரும் வரை, அவருடைய மரணத்தைச் சொல்லி கொண்டே இருக்கிறது. (1 கொரி 11:26)

4. பிரதான கட்டளைபடி திருமுழுக்கிலே கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமையை காண்கிறோம். (மத் 28:18-20; ரோ 6:1-5; கலா 3:26,27; கொலே 2:12); இரத்தமின்றி, வேதமின்றி, சபை இல்லாமல், திருவிருந்து இல்லாமல், திருமுழுக்கு இல்லாமல் உலகம் இரட்சிப்பை பெற விரும்புகிறது. ஆனால், சிலுவையின் வழியில்லாமல் வேறு கதியே இல்லை.

இந்த மேன்மையான, வல்லமையான விலையேறப் பெற்ற இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் நீங்கள் உங்கள் பாவங்கள் போக கழுவப்படாமல் இருப்பது எவ்வளவு பரிதாபத்திற்குரியது (1 தெச 5புl9; 1 கொரி 15:19). இன்றே இரட்சணிய நாள் உடனே கீழ்ப்படிவோம், (அப் 22:16). இந்த மேன்மையான காரியத்தில் உங்களுக்கு உதவ நாங்கள் எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறோம்.

# 1 ஆதாம், ஏவாள்

அன்புள்ள குட்டீஸ்! நீங்க எல்லாரும் நல்லா இருக்கீங்களா?. காலாண்டு பரிட்சையை எழுதிக்கிட்டு இருப்பீங்கன்னு நம்புகிறேன். உங்களுக்காக ஜெபிக்கிறேன்.

தேவன் (கடவுள்) இந்த உலகத்தில் முதன் முதலில் படைத்த மனுஷன், மனுஷிதான் ஆதாம், ஏவாள். இவர்கள் இரண்டு பேரையும் "ஏதேன்" என்ற அழகிய தோட்டத்தில் வைத்திருந்தார். தோட்டத்திலுள்ள செடி, கொடி, மரங்களிலுள்ள எல்லா பழங்களையும் சாப்பிட்டு சந்தோஷமாக இருங்கன்னு சொன்னாரு. ஆனால் ஒரு மரத்தில் இருக்கிற பழத்தை மட்டும் சாப்பிட வேண்டாம் என்று சொன்னார். மேலும் அதை சாப்பிட்டால் செத்துப் போவிங்கன்னு சொன்னார்.

இதை கேட்ட அவுங்க இரண்டு பேரும் கடவுளுக்கு பயந்து, அவர் சொன்னபடி நடந்து ரொம்ப ரொம்ப சந்தோஷமாக இருந்தாங்க. மேலும் தேவனும் தினமும் வந்து அவர்களை சந்தித்தார். ஒரு நாள் சாத்தான் பாம்பு உருவத்தில் ஏவாளிடம் போய் நீங்க எல்லா பழத்தையும் சாப்பிடக்கூடாதுன்னு கடவுள் சொன்னாரான்னு கேட்டான். அவளோ



இல்லை, ஆனாலும், நடுவிலிருக்கிற அந்த மரத்தின் பழத்தை சாப்பிடக் கூடாது, சாப்பிட்டால் செத்துருவோம்னு தேவன் சொன்னாரு என்றாள்.

சாத்தானோ நீங்க சாப்பிட்டா சாகமாட்டிங்க, கடவுள் போல ஆகிருவீங்க, இது கடவுளுக்கே தெரியும் என்றான். உடனே ஏவாள் சாத்தான் சொன்னதை நம்பி சாப்பிட்டு, ஆதாமுக்கு கொடுத்தாள் அவரும் சாப்பிட்டார். அவுங்க இரண்டு பேரும் தேவன் சொன்னதை மீறி நடந்து பாவம் செய்து, தேவன் வருகிற சத்தம் கேட்டு, தாங்கள் நிர்வாணிகளாக இருந்ததினால் ஒளிந்து கொண்டார்கள்.

தேவன் ஆதாமே என்று கூப்பிட்டார், தேவன் அவர்களை விசாரித்தார். ஆதாம் ஏவாள் மீதும், ஏவாள் பாம்பின் மீதும் பழி சொன்னாங்க, தேவன் அவர்களை சபித்து ஏதேன் தோட்டத்துல இருந்து விரட்டி விட்டாரு.

குட்டீஸ்! நாமளும் ஆதாம், ஏவாள் மாதிரி கடவுள் சொன்னதை கேட்காமா இருந்தோம்னா கடவுள் நம்மையும் தண்டிப்பாரு. அதனாலே நம்மை படைத்த தேவனுக்கு பயந்து, கீழ்படிந்து நல்ல பிள்ளையாக வாழ வேண்டும். அப்படி வாழ்ந்தால் தேவன் நம்மல ஆசீர்வதித்து நல்லா பாத்துக்குவாரு சரியா!.

**மனன வசனம் : 1 யோவான் 3:4**

"பாவஞ் செய்கிற எவனும் நியாயப் பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப் பிரமாணத்தை மீறுகிறதே பாவம்!.

**– பெவர்லி கிங்சிலி**

# 2 காயீன், ஆபேல்

வசன பகுதி : ஆதி : 4

ஹாய் குட்டீஸ்! தேவன் படைத்த இந்த அழகிய உலகத்திலே ஆதாம் ஏவாள் இருந்தார்கள் அல்லவா! அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்தாங்க. அவங்க பெயர்தான் காயீன், ஆபேல். இருவரும் பெரியவரானார்கள். ஆபேல் ஆடு மேய்க்கிற வேலையும், காயீன் நிலத்தை பயிரிடுகிறவனாகவும் வேலை செய்தாங்க. இரண்டு பேரும் தேவனுக்கு காணிக்கை கொண்டுவந்தாங்க. காயின் நிலத்தின் கனிகளையும், ஆபேல்தன் ஆடுகளின் தலையீற்றுகளில் (முதற்பிறந்தவைகள்) கொழுமையானவைகளையும் காணிக்கையாக கொண்டுவந்தாங்க கர்த்தர் ஆபேலையும் அவன் காணிக்கையையும் ஏற்றுக்கொண்டார். காயீனையும், அவன் காணிக்கையையும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏன் தெரியுமா? ஆபேல் விசுவாசத்துடன் காயீனை விட மேன்மையான காணிக்கை கொடுத்தார். ஆனால் காயீனுக்கோ ஆபேல் மீது எரிச்சல் வந்து, அவனது முகநாடி மாறுபட்டது. கர்த்தர் காயீனை 'எரிச்சல் படாதே, நீ நன்மை செய்தால் மேன்மை கிடைக்கும். செய்யாவிட்டால் பாவம் உன்னை பிடிக்கும்' என்றார். ஆயினும் காயீன் பொறாமையினால் ஆபேலை கொலை செய்தான். தேவன் ஆபேலை கொலை செய்ததற்காக காயீனை தண்டித்தார்.



குட்டீஸ் ! இதுல இருந்து நமக்கு என்ன தெரியுது? நாம் செய்வதை ஏற்றுக்கொள்ளாமல் மற்றவரை யாராவது பாராட்டினால், நாம் எரிச்சல், கோபம், பொறாமை படாமல், அதை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு அவர்களை விட சிறப்பாக செயல்பட வேண்டும். பொறாமைப்பட கூடாது! பொறாமை குணம் நம்மகிட்ட இருந்தா அது நம்மை கொலை செய்கிற அளவு கொண்டு போய் விடும். அதனால் பொறமை படாமல் இருப்போம்.

**மனன வசனம் (நீதி 14:30)**

சொஸ்தமனம் உடலுக்கு ஜீவன்; பொறாமையோ எலும்புருக்கி.

**- பிளாரன்ஸ் கேமிலஸ்**

# 3 ஆபிரகாம் (விசுவாசத்தின் தந்தை)

(ஆதி 12-21)

ஹாய் செல்லங்களா ! நீங்கள் எல்லாரும் நல்லா இருக்கீங்களா? உங்களுக்காக நாங்க தினமும் ஜெபிக்கிறோம். இன்று நாம் வேதாகமத்தில் விசுவாசத்தின் தந்தை என்று அழைக்கப்பட்ட ஆபிரகாம் என்பவரை பற்றி தெரிந்துக் கொள்வோமா?

ஆபிரகாம், ஊர் என்னும் பட்டணத்தில் இருந்தார். தேவன் அவரை அழைத்து, 'தான் காண்பிக்கும் தேசத்துக்கு போ' என்றார். மேலும் உன்னை ஆசீர்வதித்து, உன் பேரை பெருமைப்படுத்துவேன். உன் சந்ததியை, வானத்து நட்சத்திரங்களைபோல பெருகப் பண்ணுவேன் என்றார்.

ஆபிரகாம், தன் மனைவி சாராளையும் தன் சகோதரன் மகனாகிய லோத்தையும் கூட்டிக்கொண்டு புறப்பட்டார். அது ஒரு நீண்ட கடினமான பயணம். ஆனாலும், அவர்கள் இறுதியில் தேவன் சொன்ன புது தேசத்திற்கு வந்து சேர்ந்தனர். அந்த தேசத்தின் பெயர் என்ன தெரியுமா ? கானான்.



ஆனாலும் இதுவரை ஆபிரகாமிற்கு பிள்ளை இல்லை. ஆனாலும் ஆபிரகாம் தேவனை முழுமையாக விசுவாசித்து அவர் சொல்கிறபடியெல்லாம் செய்தான். ஆபிரகாமின் மனைவி சாராள், தனது வேலைக்காரி ஆகார் என்பவளை ஆபிரகாமிற்கு திருமணம் செய்து வைத்தாள். அவளுக்கு இஸ்மவேல் என்று ஒரு குழந்தை பிறந்தது. ஆனாலும் சில வருடம் கழித்து தேவனுடைய வாக்குத்தத்தின்படி சாராளுக்கும் குழந்தை பிறந்தது. அவர் பெயர் ஈசாக்கு. தேவன் ஆபிரகாமை அழைத்த போது அவரது வயது 75. இப்பொழுதுதோ 100. பின் சில வருடம் கழித்து தேவன் ஆபிரகாமிடம் ஈசாக்கை தனக்கு பலியிட சொன்னார். ஆபிரகாம் தேவன் சொன்ன இடத்திலே தேவன் சொன்னபடி ஈசாக்கை பலியிட கத்தியை ஓங்கினார். தேவன் தடுத்து ஆபிரகாமின் கீழ்படிதலினாலே அவரை மென்மேலும் ஆசீர்வதித்தார்.

செல்லங்களா! நாமும் ஆண்டவர் சொன்னதை கேட்டு , கீழ்படிந்து நடந்தால் தேவனிடமிருந்து வருகின்ற நன்மைகளை, ஆசீர்வாதங்ளை அனுபவித்து சந்தோஷமாக வாழலாம் OK வா!

எங்க, இந்த வசனத்தை மனப்பாடம் செய்யுங்க பார்ப்போம்!

**மனன வசனம்: எபி 11:6** விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மை தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்.

**- பிரியா ஆண்டனி**



## இம்மாதக் கேள்விகள்

1. ‘என் படியை அளந்து என்னை போஷியும்’ என ஜெபித்தது யார்?
2. தாவீது தன்னுடைய ஆத்துமா யார்மேல் தாகமாயிருக்கிறது என்கிறார்?
3. கிறிஸ்துவின் சரீரமாயும் தனித்தனியே அவயங்களாக இருப்பவர்கள் யார்?
4. சபைக்கு தலையாகவும் இரட்சகராகவும் இருப்பவர் யார்?
5. “இதோ, நான் உங்களுக்கு விரோதமானவர்” என கர்த்தர் சொன்னது ஏன்?
6. “இது உங்களால் உண்டதனதல்ல இது தேவனுடைய ஈவு” அது எது?
7. ஏசாயா ‘‘தேவனுக்கும் நமக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குவது” எது என்கிறார்?
8. ஏசாவை போல எப்படி இருக்ககூடாது என எபிரேய ஆசிரியர் எச்சரிக்கிறார்?
9. ‘‘யாருக்கு தன் கை விரோதமாயிருக்கும்’’ என்று கர்த்தர் சொன்னார்?
10. பவுல் “தான் எதற்கு ஆயத்தமாயிக்கிறேன்” என்று சொன்னார்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 5-10-2013**



## சிறுவர்க்கான கேள்விகள்

1. தேவன் படைத்த முதல் மனுஷன், மனுஷி பெயர்கள் என்ன?
2. அவர்கள் செய்த பாவம் என்ன?
3. அதினால் அவர்களுக்கு கிடைத்தது தண்டனை என்ன?
4. தேவன் ஏன் ஆபேலுடைய காணிக்கையை ஏற்றுக்கொண்டார்?
5. காயீன் ஆபேலை கொலை செய்தது ஏன்?
6. விசுவாசத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
7. ஆபிரகாமை தேவன் மென் மேலும் ஆசீர்வதித்தது ஏன்?



**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 5-10-2013**

அனுப்ப வேண்டிய முகவரி :

சகோதரி. **பேபி ராஜா**

45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு, அரசரடி

மதுரை - 625 016 செல்: 92 4421 4421

## சென்ற மாத பதில்கள்

1. யோவான் 5:35
2. யாக்1:17
3. 2 கொரி 6:14
4. யோபு 2:10
5. மத் 24:24
   மாற் 13:22
6. 1 கொரி 3 :17
7. 1 கொரி 3:8
8. ஆதி 1:14
9. 1 தீமோ 6:16
10. 1 தெச 5:5

## ஆகஸ்ட் மாதம் சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. P. சாம் – மதுரை
2. P. ஜெபக்கனி – மதுரை
3. V. ஷைனி – மதுரை
4. V. ஷாலி – மதுரை
5. I. ஷீபா பிரியதர்ஷினி – சிவகங்கை
6. P. சௌந்தர் பாண்டி – திருமங்கலம்
7. M. அரவிந்த் – கோவை
8. R. ரோஸ்மேரி – சென்னை
9. R. சேம் – உக்கிரங்கோட்டை
10. R. அலெக்ஸ் ஜெர்சன் ராஜ் – சென்னை

## ஆகஸ்ட் மாதம் பதில் எழுதியவர்கள்

S. கேத்ரின் அருள் நேசம் – மதுரை
J. ஜோசப் – கோவில்பட்டி
A. வசந்தி எலிசபெத் – மதுரை
C. ரேச்சல் – சேலம்
G. பீற்றர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
K. மோகன் – குமாரபாளையம்
Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
Mrs. ஜெமி நல்லையா – மதுரை
P. இந்திரா பாண்டி – திருமங்கலம்
G. ஏஞ்சலம்மாள் – வளர்நகர்
J. விஜய் – வளர்நகர்
இரா. எத்திராசன் – சேலம்
Mrs. ஸ்டெல்லா வால்டர் – கோவை
A. ரோஸ் மேரி – சென்னை
G. புஷ்பா ஜேம்ஸ் – விருதுநகர்
S.M. தவமணி தேவி – திருப்பூர்
Dr. சூசன் எட்வர்ட் – சென்னை
Mrs. ஹெப்ஸி தாமஸ் – படப்பை
Mrs. ரூபி ஜெபராஜ் – மதுரை
S. ஜெயராஜ் – பொள்ளாச்சி
Mrs. லாரா ரத்னராஜ் – தூத்துக்குடி
J. கஸ்தூரி கலாவதி – மதுரை
Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
Mrs. மேரிராஜ் – மதுரை
Mrs. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
Mrs. ஜோன் தேவநாயகம் – நெல்லை
R. பால் ஜெயராஜ் – சென்னை
Mrs. ஞானசுந்தரி – கோவை
Mrs. சிந்தனைமலர் ரவீந்தர் – ஆம்பூர்
G. வசந்தா கனேசரேத் – ஆம்பூர்
M. அலெக்சாண்டர் சாலமோன் – சிவகங்கை
Sis. டெய்ஸி தர்மராஜ் – புதுகோட்டை
I. ஞானசுந்தரி நாகராஜன் – கீழப்பாவூர்
Mrs. பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு
Mrs. பெரில்பாஸ்கர் – படப்பை
Mrs. லில்லி ஆல்பர்ட் – நெல்லை
S. சூசை மரியான் – சென்னை
R. சரோஜா – தென்கலம்
Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
Mrs. ஹெலன் திலக் – மதுரை
Mrs. ரேச்சல் தமிழரசி – மதுரை

**தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !**

# பார்வையற்றோர் மத்தியில் சுவிசேஷப்பணி மற்றும் அன்பை வெளிப்படுத்தும் உதவிகள்

## Gospel efforts and Benevolence work among Blind people









மதுரை கருப்பாயூரணியில் கூடிவரும் பார்வையற்றோருக்கான கிறிஸ்துவின் சபை

மதுரை திருவாதவூரில் நடைபெற்ற பார்வையற்றோர் வேதாகம முகாமில் கலந்துகொண்டவர்களுக்கு அரிசியும், உணவும் கொடுக்கப்பட்டுள்ளது.











மதுரை அரசரடியில் நடைபெற்ற பார்வையற்றோர் முகாமில் நமது ஆசிரியர் கலந்து கொண்டு பங்குபெற்றோருக்கு வேதாகம ஆலோசனைகளும் அரிசியும் உணவும் வழங்கினார்கள்

Bible camp for Blind People at Arasaradi









Sermon outlines, Special Books, Quarterly Magazine & Braille Magazine for Blinds












Christian Handbills available on different topics


Write to our Address or Email us, To receive these materials.




ஆசிரியர் தின வாழ்த்துக்கள்

Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819


Registered News Paper No. : TNTAM/2001/14161
Postal Registration No. : MA/07/2012-2014
Posted at Arasaradi HPO on 10th, 11th September 2013


















**விளக்கவுரை புத்தகங்களும்**
**பல்வேறு தலைப்புகளில் கிடைக்கும்**

*If undelivered please return to :*

**EDITOR**
**KIRUBAIYULLA VARTHAI**
45 C/1, Church Lane,
Coronation Street,
Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421
92 4431 4431

**To**

Visit www.graciousword.org to read kv magazine online